முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1657

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.04.2024,** வெள்ளிக்கிழமை

1. வையகம் வாழ்வாங்கு வாழவே
வள்ளல் தன்மை நிறைந்து உலகம் செழிக்கவே
ஐயன் எந்தன் அவதாரமாகவே
அகிலத்தில் அற்புதம் நிகழ்த்துகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 30 ம் நாள், 12.04.2024, வெள்ளிக்கிழமை)
மெய்ஞானம் மக்களிடை பரப்பி
மேலவர்களாக உலகோரை மாற்றி
3. மாற்றியே உலகமாற்றம் நிகழ்த்த
மகானாய் அற்புதம் நடத்தும் அரங்கனே
அரங்கனே உன் நோக்கம் வெற்றி கொள்ளும்
அரங்கன் உன் அவதாரத்தின் வழி இனிதே
4. வரங்கள் மக்களிடை பெருகினாலும்
வையகத்தில் ஞானவான்களாக நிரம்ப
நிரம்பவே இந்த கலியுகம்
ஞான லோகமாகவே மாற்றம் கண்டு
5. ஞான யுகமாகவே மாற்றம் கண்டு
வருங்காலம் அரங்கன் தலைமை ஏற்ற
வல்லமைபட ஆறுமுகன் என் ஆசி பெற்ற
பெருமை கொண்ட மாந்தர்களெல்லாம்
6. பெருமளவில் ஆன்மீக ஞான அரசியல் களம் கண்டு
இந்த வையகத்தைக் காக்கும் மாற்றம் நிகழக்கூடும்
கூடவே இந்தவித அற்புதத்தை
குரு அரங்கன் வழி நடத்தவே

7. ஈடேற்றம் ஆறுமுகன் யான்
என்னாளும் அரங்கனோடு இணைந்து செய்து வருகின்றேன்
வரம்பெற உலகோர் அரங்கன் வழி வணங்கி வந்தால் போதும்
வையகதுக்கு உடன் மாற்றமும் விடிவும்

8. இனிதே கண்டு அற்புதம்பட
ஞான யுகமாற்றம் ஞான ஆட்சிக்காலம்
ஞான சித்தர்கள் காலமாக மாறி அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—